**த. நா.ச.பே. எண் : 005** **நாள் :01.08.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள சட்ட முன்வடிவில் ''சென்னை உயர்நீதிமன்றம்'' என்பதற்கு பதிலாக ''தமிழ்நாடு உயர்நீதிமன்றம்'' என மாற்றம் செய்ய மத்திய அரசை கேட்டுக் கொண்டு, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 1.8.2016 அன்று முன்மொழிந்த அரசினர் தனித் தீர்மானம்.

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தக் குடி தமிழ்க் குடி !

உலகில் எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன. இருந்தாலும், பல்வேறு மொழிகளுக்கு இல்லாத சிறப்பு அன்னைத் தமிழ் மொழிக்கு உண்டு. வார்த்தைக்கு பஞ்சமில்லா மொழி தமிழ் மொழி. தமிழ்ச் சொல்லுக்கு தனி ஓசையுண்டு! எண்ணமெல்லாம் ஈர்க்கும் திறனுண்டு! இன்னும் எத்தனையோ சிறப்புகள் உண்டு! இயல், இசை, நாடகம் என்று முத்தமிழாய்ப் பிரித்து மொழியில் தனித் தன்மையை பழந்தமிழ் பெரியோர்கள் உண்டாக்கினர். யாழின் இனிமையோ, குழலின் நாதமோ என்று வியந்திடும் வண்ணம் அழகிய சொற்களைக் கொண்ட மொழி தமிழ் மொழி.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே கடல் கடந்து உலகமெங்கும் வணிகம் புரிந்து வரலாற்றை படைத்த நாடு தமிழ்நாடு! கல்வியில் சிறந்த நாடு தமிழ்நாடு! அறம் வளர்த்த நாடு தமிழ்நாடு! தியாகம் பிறந்த நாடு தமிழ்நாடு! வீரம் செறிந்த நாடு தமிழ்நாடு! அனைத்து சமயங்களையும் போற்றி வளர்க்கின்ற நாடு தமிழ்நாடு! வள்ளுவன் தன்னை உலகுக்கு அளித்து வான்புகழ் கொண்ட நாடு தமிழ்நாடு! கலைக்கு மதிப்பு கொடுப்பது தமிழ்நாடு! வந்தாரை வாழ வைக்கும் நாடு தமிழ்நாடு!

நீண்ட நெடிய வரலாற்று பராம்பரியமும், பண்டைய நாகரிகத்தையும், கலாச்சாரத்தையும் உள்ளடக்கி தமிழன் என்ற தன்னிகரில்லா சொற்றொடருக்கு உரித்தாகி தமிழ் மொழியின் மீதும், தமிழ்நாட்டின் மீதும் உணர்வுப்பூர்வமாக பற்றுள்ளவர்கள் தமிழர்கள். எனவே தான், "தமிழன் என்றொரு இனமுண்டு. தனியே அவருக்கொரு குணமுண்டு" என்று பாடினார் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

தமிழ் மொழி பேசும் மக்களைக் கொண்ட பகுதி தமிழ்நாடு என்றே பன்நெடுங்காலமாக விளங்கி வருகிறது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, தொல்காப்பியத்திற்கு பாயிரம் பாடிய பனம்பாரனார்,

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்"

என தமிழ்நாட்டின் அன்றைய எல்லையைக் குறிப்பிடுகின்றார்.

சிலப்பதிகாரத்தில்

''இமிழ் கடல் வரைப்பில் தமிழகம் அறியத்
தமிழ் முழுது அறிந்த தன்மையன் ஆகி,''
என்று சொல்லப்பட்டுள்ளது.

மகாகவி பாரதியார்

"செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே"
என்றும்,

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

"தமிழ் நாடே வாழ்க – எம்
அமிழ்தாகிய இயல், இசை, கூத்தென்னும்
தமிழாகிய உயிர்தழையும் விழுமிய
தமிழ் நாடே வாழ்க!"
என்றும் தமிழ்நாட்டின் பெருமைகளை எடுத்துச் சொல்லியுள்ளனர்.

ஆனால், இந்திய அரசமைப்புச் சட்டத்திலும், மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போதும், மெட்ராஸ் மாநிலம் என்றே தமிழ்நாடு வழங்கப்பட்டது. இதனை மாற்றி ''தமிழ்நாடு'' என பெயரிடப்பட வேண்டும் என பலரும் போராடி வந்த நிலையில் சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிர் நீத்தார். மெட்ராஸ் மாநிலத்தின் பெயரை ''தமிழ்நாடு'' என பெயர் மாற்றம் செய்யும் தீர்மானத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்திலே கொண்டு வந்து நிறைவுரை ஆற்றும் போது சங்கரலிங்கனார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட வேண்டியதைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். பேரறிஞர் அண்ணாவின் எண்ணத்தை செயலாக்கும் வகையில், தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கு விருதுநகர் மாவட்டத்தில் மணிமண்டபத்தை அமைத்து, அதனை கடந்த 19.6.2015 அன்று நான் திறந்து வைத்தேன்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் நமது மாநிலத்தின் பெயர் ''மெட்ராஸ் மாநிலம்'' என்று இருப்பதை, ''தமிழ்நாடு'' என மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 18.7.1967 அன்று இந்தப் பேரவையிலே கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அதன் அடிப்படையில், 1968–ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே சட்டம் இயற்றப்பட்டு, 14.1.1969 முதல் நமது மாநிலம் "தமிழ்நாடு'' என வழங்கப் பெறுகிறது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் 'The Indian High Courts Act, 1861' அதாவது, 'இந்திய உயர் நீதிமன்றங்களின் சட்டம், 1861' என்ற சட்டம்

நிறைவேற்றப்பட்டு, விக்டோரியா மகாராணியால் வெளியிடப்பட்ட சாசனத்தின் அடிப்படையில் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் **1862–**ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த உயர்நீதிமன்றம் அப்போதைய சென்னை மாகாணம், அதாவது மெட்ராஸ் பிரசிடென்சி முழுமையையும், அதாவது ஆந்திரா, கேரளா பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்ததால் இது, High Court of Judicature at Madras என உயர்நீதிமன்றம் அமைந்துள்ள இடத்தைக் குறிக்கும் வகையில் பெயரிடப்பட்டது.

1956-ஆம் ஆண்டு மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பின், ஏற்படுத்தப்பட்ட உயர்நீதிமன்றங்கள் அந்தந்த மாநிலங்களின் பெயராலேயே பெயரிடப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் மகாராணி வழங்கிய சாசனத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மெட்ராஸ் உயர்நீதிமன்றம் தற்போதும் அந்தப் பெயராலேயே வழங்கப்படுவது பொருத்தமானதல்ல. மெட்ராஸ் மாநகரத்தின் பெயர் **1996–**ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் சென்னை மாநகரம் என பெயர் மாற்றம் செய்ததன் அடிப்படையில், **1997–**ஆம் ஆண்டு, High Court of Judicature at Madras என்பது 'High Court of Judicature at Chennai' என மாற்றம் செய்யப்பட வேண்டும் என மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது மத்திய அரசு, பம்பாய், கல்கத்தா மற்றும் மெட்ராஸ் உயர்நீதிமன்றங்களின் பெயர்களை மாற்றம் செய்வதற்காக, 'The High Courts (Alteration of Names) Bill, 2016' அதாவது, உயர்நீதிமன்றங்கள் (பெயர் மாற்றம்) சட்ட முன்வடிவு, **2016** என்ற ஒரு சட்ட முன்வடிவை மக்களவையில் **19.7.2016** அன்று அறிமுகம் செய்துள்ளது. இந்த சட்ட முன் வடிவில், குறிப்பிடப்பட்ட நாளிலிருந்து மெட்ராஸ் உயர்நீதிமன்றம் என்பது ''சென்னை உயர்நீதிமன்றம்'' என வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் அமைந்துள்ள இந்த உயர்நீதிமன்றம் சென்னைக்கு மட்டுமல்லாது தமிழ்நாடு முழுமைக்குமான, உயர்நீதிமன்றம் என்பதாலும்; மதுரையில் அமைந்துள்ள உயர்நீதிமன்றத்தின் கிளை சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை என்று சொல்வதை விட தமிழ்நாடு உயர்நீதிமன்றத்தின் கிளை என்று சொல்வதே பொருத்தமானது என்பதாலும், இந்தியாவில் உள்ள பெரும்பாலான உயர்நீதிமன்றங்கள் மாநிலத்தின் பெயராலேயே பெயரிடப்பட்டிருப்பதாலும், சென்னையில் உள்ள உயர்நீதிமன்றம், ''தமிழ்நாடு உயர்நீதிமன்றம்'' என பெயரிடப்படுவதே சாலப் பொருத்தமாகும். எனவே, மத்திய அரசால் தாக்கல் செய்யப்பட்ட சட்ட முன்வடிவில் மாற்றங்கள் செய்து, ''தமிழ்நாடு உயர்நீதிமன்றம்'' என பெயரிடப்பட வேண்டும் என மத்திய அரசை கேட்டுக் கொள்ளும் பின்வரும் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

# தீர்மானம்

'மத்திய அரசு பம்பாய், கல்கத்தா மற்றும் மெட்ராஸ் உயர்நீதிமன்றங்களின் பெயர்களை மாற்றம் செய்வதற்காக, 'The High Courts (Alteration of Names) Bill, 2016' அதாவது, உயர்நீதிமன்றங்கள் (பெயர் மாற்றம்) சட்ட முன்வடிவு, **2016** என்ற ஒரு சட்ட முன்வடிவை மக்களவையில் **19.7.2016** அன்று அறிமுகம் செய்துள்ளது. இந்த சட்ட முன்வடிவில் குறிப்பிடப்பட்ட நாளிலிருந்து மெட்ராஸ் உயர்நீதிமன்றம் என்பது சென்னை உயர்நீதிமன்றம் என வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசமைப்பு சட்டத்தில் மெட்ராஸ் மாநிலம் என குறிப்பிடப்பட்டுள்ள பெயரை தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்வதற்கான தீர்மானம் **18.7.1967** அன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, அதன் அடிப்படையில் **1968–**ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டு, 14.1.1969 முதல் நமது மாநிலம் தமிழ்நாடு என வழங்கப் பெறுகிறது.

மெட்ராஸ் மாநகர் என்பது **1996–**ஆம் ஆண்டைய சட்டத்தின் மூலம் சென்னை மாநகர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, சென்னை என்பது சென்னை மாநகரை மட்டுமே குறிக்கும்.

சென்னை மாநகரில் அமைந்துள்ள உயர்நீதிமன்றம் தமிழ்நாடு முழுமைக்குமான உயர்நீதிமன்றமாக விளங்குவதாலும்; **1956–**ஆம் ஆண்டு மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்டு, பெயரிடப்பட்டதன் காரணமாக, அந்தந்த மாநிலங்களில் உள்ள உயர்நீதிமன்றங்கள் அந்தந்த மாநிலங்களின் பெயரிலேயே அழைக்கப்படுவதாலும், தற்போது மெட்ராஸ் உயர்நீதிமன்றம் என அழைக்கப்படும் உயர்நீதிமன்றத்தின் கிளை மதுரையில் செயல்பட்டு வருவதாலும்; தமிழ்நாடு முழுமைக்குமான உயர்நீதிமன்றத்தை ‘‘சென்னை உயர்நீதிமன்றம்’’ என அழைக்கப்படுவது பொருத்தமற்றதாக இருக்கும் என்பதாலும், தற்போது மெட்ராஸ் உயர்நீதிமன்றம் என அழைக்கப்படும் உயர்நீதிமன்றம், ‘‘தமிழ்நாடு உயர்நீதிமன்றம்’’ என அழைக்கப்படுவதே சரியானது என்பதால், மக்களவையில் மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள சட்ட முன்வடிவில் ‘‘சென்னை உயர்நீதிமன்றம்’’ என்பதற்குப் பதிலாக ‘‘தமிழ்நாடு உயர்நீதிமன்றம்’’ என்று மாற்றம் செய்யப்பட வேண்டுமென மத்திய அரசை இந்த மாமன்றம் கேட்டுக் கொள்கிறது'.

இந்தத் தீர்மானத்தை இம்மாமன்றம் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**